## சுருக்கம்

ஆட்சி எல்லை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தை பிரித்து புதிய ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம் உருவாக்குதல் – நிதி ஒதுக்கீடு பணியிடங்கள் உருவாக்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி1(1)] துறை

அரசாணை (நிலை) எண்.162

நாள்: 03.06.2013
வைகாசி மாதம், விஜய வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை)எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி கடித எண். ந.க.எண்.உ4/8944/2013, நாள் 18.03.2013.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.பணி6(4)/ 17708/13, நாள் 17.04.2013.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவுகோல் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் தற்போது திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய நான்கு வருவாய் வட்டங்கள் உள்ளன. இக்கோட்டத்தில் உள்ள மணப்பாறை வட்டத்தினை மணப்பாறை மற்றும் மருங்காபுரி என இரு வட்டங்களாக பிரிப்பதற்கான முன்மொழிவுகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும், திருச்சிராப்பள்ளி வட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதாகவும், இவ்வட்டத்தில் மக்கள் தொகை எண்ணிக்கை 753751 எனவும், பொதுமக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி தற்பொழுது திருச்சிராப்பள்ளி வட்டத்தினை இரண்டாக பிரித்து முன்மொழிவுகள் தயார் செய்து அனுப்பப்பட்டது. மேலும், மேற்கண்ட இரு முன்மொழிவுகள் அரசால் ஏற்கப்படும் பட்சத்தில் திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தில் திருச்சிராப்பள்ளி மேற்கு, திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, மருங்காபுரி ஆகிய 6 வட்டங்கள் செயல்படும்.

//த.பி.பா.//

(ii) மேலும், பொது மக்களுக்கு விரைவான சேவை அளித்திடும் பொருட்டும், நிர்வாக நலன் கருதியும் திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தின் ஆட்சி எல்லையினை கீழ்க்கண்டவாறு இரு வருவாய் கோட்டங்களாக பிரிக்கலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | வருவாய் கோட்ட தலைமையிடம் | வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட வட்டங்கள் |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மேற்கு |
| | | திருச்சிராப்பள்ளி கிழக்கு |
| | | திருவெறும்பூர் |
| 2 | ஸ்ரீரங்கம் | ஸ்ரீரங்கம் |
| | | மணப்பாறை |
| | | மருங்காபுரி |

iii) திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி வட்டம் முழுவதும் மாநகராட்சி பகுதியாக உள்ளதாகவும், எனவே அதிக மக்கள் தொகை காரணமாக, அதிக எண்ணிக்கையிலான மனுக்களை கையாள வேண்டிய நிலை உள்ளதாகவும், மேலும் திருச்சிராப்பள்ளி இம்மாநிலத்தின் மையப்பகுதியாக உள்ளதால், முக்கிய பிரமுகர்கள் வருகை போன்ற சிறப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியள்ளதாகவும், திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தின் ஆட்சி எல்லை மாற்றி அமைக்கப்படுவதன் காரணமாக பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், முக்கிய பிரமுகர் வருகை போன்ற சிறப்பு பணிகளை சீரிய முறையில் செய்பவும், சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பணிகளை கண்காணிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தவும் இயலும் எனவும், மேலும் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரேத விசாரணை போன்ற இனங்களை உடனுக்குடன் முடிவு செய்யவும், சான்றுகள், மேல்முறையீட்டு மனுக்கள் ஆகியவற்றில் துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் இயலும் .

iv) திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் உள்ள திருவெறும்பூர் வட்டம் தொழிற் நிறுவனங்களை (BHEL, OFT, HAPP) உள்ளடக்கிய வட்டம் ஆகும். அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் மனுக்களை உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும், இவ்வட்டத்தில் நிலம் தொடர்பான மேல்முறையீடுகள் நிலுவை இனங்கள் அதிக அளவில் உள்ளதால், அவற்றின் மீது காலதாமதமன்றி விரைவில் தீர்வு செய்ய இயலும் என்பதையும் தெரிவித்துள்ளார்.

v) உத்தேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்தினை புதிதாக உருவாக்குவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியான ஸ்ரீரங்கம் வட்டத்தில் மக்கள் நலத்திட்ட பணிகளை விரைந்து செயல்படுத்தவும், புதிதாக அறிவிக்கப்படும் திட்ட பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி விரைவாக முடிவு செய்திடவும், திட்ட பணிகளுக்கான நிலம் கையகம் / நிலமாற்றம் தொடர்பான பணிகள் அந்தந்த வருவாய் கோட்ட அலுவலகத்தில் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும், பொதுமக்களின் கோரிக்கைகள் / மேல்முறையீடுகள் மீது துரித முடிவெடுக்கவும் இயலும் எனவும், மணப்பாறை மற்றும் மருங்காபுரி வட்டத்தில் நிலம் தொடர்பான பணிகள் அதிக அளவில் உள்ள வட்டங்கள் என்பதால் வருவாய் கோட்டாட்சியர் நேரடி கண்காணிப்பில் விரைந்து முடிவு செய்ய இயலும் எனவும் தெரிவித்துள்ளார்.

//த.பி.பா.//

திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய ஸ்ரீரங்கம் கோட்டம் உருவாக்குதல் குறித்த நிலைப்படிவம் கீழ்கண்டவாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ளார்.

| வ எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி கோட்டம் | உத்தேச பிரிவினைக்கு பின் கோட்டம் | | அரசாணை எண்.279, வ.து., நாள் 09.06.2003–ன்படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|
| | | | உத்தேசிக்கப்பட்ட கோட்டம் | எஞ்சியகோட்டம் | |
| | | திருச்சிராப்பள்ளி | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | |
| 1. | தலைமையிடம் | திருச்சிராப்பள்ளி | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | |
| 2. | பரப்பளவு (ச கி மீ ) | 1743.39 ச.கி.மீ | 1347.88 ச.கி.மீ | 395.51 ச.கி.மீ | குறைந்த அளவு 1000 ச.கி.மீ அதிகளவு 4500 ச.கி.மீ |
| 3. | மக்கள் தொகை | 16,90,640 | 7,20,635 | 9,70,005 | குறைந்த அளவு 4,00,000 முதல் அதிக அளவு 15,00,000 |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருச்சிராப்பள்ளி | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | திருச்சிராப்பள்ளி மேற்கு, திருச்சிராப்பள்ளி கிழக்கு, ஸ்ரீரங்கம், திருவெறும்பூர், மணப்பாறை | ஸ்ரீரங்கம் மணப்பாறை | திருச்சிராப்பள்ளி மேற்கு திருச்சிராப்பள்ளி கிழக்கு திருவெறும்பூர் | |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி / கரூர் | திருச்சிராப்பள்ளி | |
| 7. | நகராட்சி எண்ணிக்கை/ பெயர் | 2<br>மணப்பாறை<br>துவாக்குடி | மணப்பாறை | துவாக்குடி | |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 6<br>அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி. | • அந்தநல்லூர்<br>• மணிகண்டம்<br>• மணப்பாறை<br>• மருங்காபுரி<br>• வையம்பட்டி | திருவெறும்பூர் | |

//த.பி.பா.//

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | டவுன் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 3<br>கூத்தப்பார்<br>சிறுகமணி<br>பொன்னம்பட்டி | சிறுகமணி<br>பொன்னம்பட்டி | கூத்தப்பார் | |
| 10. | உள் வட்டங்களின் எண்ணிக்கை | 17 | 12 | 5 | குறைந்த அளவு 2 வட்டங்கள் |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 206 | 162 | 44 | குறைந்த அளவு 100 கிராமங்கள் |
| 12. | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 159 | 135 | 24 | |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமத்தின் தூரம் | மணப்பாறை வட்டம் தெத்தூர் (80 கி.மீட்டர்) | மணப்பாறை வட்டம் தெத்தூர் (60 கி.மீட்டர்) | சூரியூர் ( 25 கி.மீட்டர்) | |

vi) புதிதாக உருவாக்கப்பட உள்ள ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யவேண்டிய பணியிட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | திருச்சிராப் பள்ளி வருவாய் கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்திற்கு மாற்றப் படும் பணியிடங்கள் | ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் | ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத் திற்கு ஒப்பளிக்கப்பட வேண்டிய மொத்தப் பணியிடங் கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (6+7) |
| 1. | வருவாய் கோட்ட அலுவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | வருவாய்கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | – | – | – | 1 | 1 |
| 4. | உதவியாளர் | நிரந்தரம் / தற்காலிகம் | 3 | 3 | – | 3 | 3 |

//த.பி.பா.//

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 6. | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 7. | சுருக்கெழுத்தர் | நிரந்தரம் | – | – | – | 1 | 1 |
| 8. | பதிவறை எழுத்தர் | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| 9. | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 2 | 2 | – | 2 | 2 |
| 10. | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 11. | இரவுக் காவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 12. | மசால்ஜி | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 13. | தோட்டக்காரர் | நிரந்தரம் | – | – | – | – | – |
| | மொத்தம் | | 13 | 13 | – | 15 | 15 |

மேலே விவரிக்கப்பட்டவாறு புதிய ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு 15 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யலாம்.

vii) புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவீனம் பின்வருமாறு :–

## I. தொடரும் செலவினங்கள் :–

| வ. எண் | விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 31,57,000 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை | 2,40,000 |
| 3 | மின்சாரக் கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 2,40,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) (ஆண்டொன்றுக்கு) (160 லி ரூ.50 x 12 மாதங்கள்) | 96 ,000 |
| 5 | தொலைபேசி கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 50,000 |
| | மொத்தம் | 37,83,000 |

//த.பி.பா.//

## II. தொடரா செலவினங்கள்:–

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 1,80,00,000 |
| 2 | கோட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 35,00,000 |
| 3 | தளவாடங்கள் | – | 3,00,000 |
| 4 | ஈப்பு | 1 X 6,00,000 | 6,00,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 X 5,000 | 10,000 |
| 6 | கணினி | 5 X 30,000 | 1,50,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 5 X 25,000 | 1,25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 X 1,00,000 | 1,00,000 |
| 9 | பேக்ஸ் | 1 X 20,000 | 20,000 |
| 10 | குளிர்சாதனம் | 2 X 50,000 | 1,00,000 |
| 11 | தீயணைப்பான் | 6 X 5,000 | 30,000 |
| | மொத்தம் | | 2,29,35,000 |

3. அரசாணை(நிலை)எண்:279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–ல் நிர்ணயிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையைத் தவிர அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்வதால், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று. திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தினைப் பிரித்து புதிய ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம் உருவாக்க கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேலே பத்தி 2(vi)–இல் தெரிவிக்கப்பட்டவாறு ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்திற்கு 15 பணியிடங்கள் தோற்றுவிக்க ஒப்பளிப்பு செய்தும், பத்தி 2(vii)–இல் தெரிவிக்கப்பட்டவாறு தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறும் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பாசீலித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தினை பிரித்து புதிய ஸ்ரீரங்கத்தினை தலைமையிடமாகக் கொண்டு இணைப்பு–I-இல் கண்டுள்ளவாறு புதிய ஸ்ரீரங்கம் கோட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படவுள்ள ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்திற்கு பத்தி 2(vi)–இல் உள்ள பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

//த.பி.பா.//

(iii) புதியதாக உருவாக்கப்படவுள்ள ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்திற்கு மேலே பத்தி 2(vii)ல் கண்டுள்ளபடி தொடரும் செலவினமாக வருடத்திற்கு ரூ.37,83,000/–க்கும் மற்றும் தொடரா செலவினமாக ரூ.2,29,35,000/–க்கும் நிதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(அ) பணியாளர் சம்பளங்கள் ரூ. 31,57,000/–

(i) வருவாய் பணியிடங்கள்

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள்

2029 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள்

3456 00 நுகர் பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

2053-00 மாவட்ட நிருவாகம் – 094 – ஏனைய பணியாளரமைப்பு – I திட்டத்தில் சேராதது AB - வட்ட பணியாளரமைப்புகள்

(ஆ) 05 அலுவலக செலவகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள் (ரூ.60000/–)
தொடரும் செலவினம் ரூ. 50,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.10000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(இ) 05 அலுவலக செலவகள் 03 மின் கட்டணங்கள் (ரூ.240000/–)
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(ஈ) 05 05 அறைகலன்கள் ரூ. 3,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(உ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை ரூ 2,40,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

//த.பி.பா.//

(ஊ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ. 2,50,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(எ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ. 6,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(ஏ) 45–00 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ. 96,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஐ) 76 கணிணியும் துணை பாகங்களும் 01 வாங்குதல் ரூ.2,,75,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

(ஒ) அலுவலகக் கட்டடம் ரூ. 1,80,00,000/–
4059 பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC –நிலவரி – 16 பெரும்பணிகள்
(த.தொ.கு 4059 01 051 JC 1609)

(ஓ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 35,00,000/–
4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசு குடியிருப்பு கட்டடங்கள் – 106 பொது தொகுப்பு இட வசதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JC வருவாய்த் துறை – வீட்டுவசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்
(த.தொ.கு 4216 01 106 JC 1601)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணித் திட்டமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.ச.பொது.1)துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2013–2014 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது/வருவாய்)துறைக்கு அனுப்புமாறு கூடுதல் முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த ஆணையின் இணைப்பு–I –இல் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய கோட்டம் 03.06.2013 ஆம் நாள் முதல் செயல்படும்.

//த.பி.பா.//

8. புதிய ஸ்ரீரங்கம் வட்டம் உருவாக்குவது குறித்து, மேலே பத்தி 3 –இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.27391/சி.எம்.பி.சி/2013. நாள் 24.5.2013 இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப்பேரடு எண். 282 (இருநூற்று எண்பத்து எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079
(சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர் மற்றும் இயக்குநர்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–9.
ஆணையர் கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வ.செ.பொது–I /பொது– II /வருவாய் (கக–I)/பொதுப்பணி-I/ மை.மஆபி) துறை, சென்னை–9.
நிதி (C.M.P.C) துறை. சென்னை–9
இகோ/உதிரி –2

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு –I

அரசாணை (நிலை) எண்.162, வருவாய்த்துறை, நாள் 03.06.2013

### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து கீழ்க்கண்ட மூன்று வட்டங்களை உள்ளடக்கி புதிய ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம் 2013 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம்நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிதாக உருவாக்கப்படும் ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டத்தை உள்ளடங்கும் வட்டங்கள் அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியரால் 2013 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

### அட்டவணை

| வ.எண். | வருவாய் கோட்டத்தின் பெயர் | உள்வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | ஸ்ரீரங்கம் | 1. ஸ்ரீரங்கம்<br>2. மணப்பாறை<br>3. மருங்காபுரி |

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.